**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 289/2019**

2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய சுப்ரமணியன் **DW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 22.01.2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | சுப்ரமணியன் | | |
| Father /Husband Name | : | தங்கவேலு | Court | : |
| Village | : | எரவாஞ்சேரி | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 62/2026 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் பிரதிவாதி மற்றும் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1 | -- | தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதி வாதி மற்றும் அவரது சகோதரர்களுக்கு எதிராக சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 29/2022ன் வழக்குரையின் சான்றிட்ட நகல் **பிவாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | -- | மேற்படி அசல் வழக்கு எண். 29/2022ல் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் சான்றிட்ட நகல் **பிவாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | 26.03.2008 | தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிக்கும் வாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரய ஒப்பந்தத்தின் சான்றிட்ட நகல் **பிவாசாஆ 3** ஆக |

| | | |
|---|---|---|
| | | குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | 19.02.2019 | வாதி பிவாசாஆ 3 ல் வரவு வைத்து எழுதியுள்ள மேற்குறிப்பு **பிவாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.